**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சிவராஜா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. விருமாண்டி** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர்** |
| **Village** | : | **ஒட்டன்சத்திரம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **33** |
| | | | **Dated** | : | **28.05.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

அ.சா. 14 (பட்டியல் சாட்சி 18), திரு. **சிவராஜா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் தற்போது திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகின்றேன். கடந்த 06.08.2023ம் தேதி 13.00 மணிக்கு திண்டுக்கல், கன்னிவாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது, வழக்கின் புகார்தாரர் நிலைம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, காவல்நிலைய குற்ற எண். 151/2023, இ.த.ச பிரிவுகள் 294(b), 304(ii) ஆகியவற்றின் கீழ் முதல் தகவ்ல அறிக்கை பதிவு செய்து ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அது Ex. P15. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து எப்பொழுது தகவல் வந்தது என சரியாக நினைவில் இல்லை. புகாரைப் பெறுவதற்கு முன்பு நான் காவல் நிலையத்தில் தான் பணியில் இருந்தேன் என்றால் சரியாக சொல்ல முடியாது. வெளியிலும் இருந்து இருப்பேன், நிலையத்திற்கும் வந்து இருப்பேன். திண்டுக்கல் அரசு மருத்தவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் வந்தது என்றும், அது என் உயர் அதிகாரிகளின் ஆலோசனையால் அது மறைக்கப்பட்டது என்றும், புகாரை பெறுவதற்கு முன்பாக வேறு நபர்களிடம் இருந்து பெறப்பட்ட வழக்கு சம்பந்தமான புகார் வாக்குமூலங்கள் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு புகாரில் அசா. 1 தனது கணவரை கீழே தள்ளி விட்டு தலையிலும், நெஞ்சிலும் அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. நான் சொன்னது போல சொன்ன விதத்தில், சொன்ன இடத்தில் புகார் வாக்குமூலம் பெறவில்லை என்றும், எழுதப்படாத வெள்ளைத் தாளில் புகார்தாரரின் கையொப்பம் பெறப்பட்டு, அதன்பிறகு காவல் துறையினரால் அது நிரப்பப்பட்டு புகார் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.28 18:23:00 +0530